


## தளராமல் உழைக்கிறேன்!




## இனி விவசாயம் தான் எதிர்காலம்

வேலை தேடி சுத்தினேன். அப்புறம் சொந்தத் தொழிலில் இறங்கிட்டேன். லோன் கட்ட முடியாம வங்கியில் நிறுத்தி வச்சிருக்கிற டூ வீலர்களை வாங்கி விற்றுக்கொடுக்கும் வேலை. ஒரு வண்டியை விற்றுக்கொடுத்தால் 500 ரூபாய் கிடைக்கும். இந்த 500 ரூபாய்க்காக ஓயாமல் உழைக்கிறேன். குறைவான சம்பளமாக இருந்தாலும் இதுதான் நிரந்தரம்னு இந்த கஷ்ட காலத்துலதான் புரிஞ்சுகிட்டேன்" என்கிறார் பிரவீன்.

**வெங்கட்சுப்ரமணியம் - ஸ்ரீவல்லி** (தம்பதி)

**படிப்பு - எம்.எஸ்.ஐ.டி.**

**பழைய வேலை - ஐ.டி.**

**தற்போதைய வேலை - காய்கறி விற்பனை வியாபாரம்.**

கணவன், மனைவி இரண்டு பேருமே லட்சக்கணக்கில் சம்பாதித்த ஐடி வேலையை விட்டுட்டு 'ஈ ஃபார்ம்' காய்கறி விற்பனை சுயதொழிலைத் தொடங்கியிருக்காங்க. "காய்கறிகளை இடைத்தரகர்களில்லாமல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கி விற்பனை செய்து கொடுக்கும் மார்க்கெட்டிங் வேலையைத்தான் நாங்க செய்யறோம். கம்ப்யூட்டர் புரோகிராமிங் வேலை செய்த எங்களுக்கு காய்கறி விக்குற வேலை புதுசு. ஐ.டி.யிலிருந்து வெளில வர முக்கியக் காரணம் ஸ்டிரெஸ். ஒரு நாளைக்கு 20 மணிநேரம் வேலை. இன்னொரு கம்பெனிக்காக உழைப்பதைவிட, நம்ம சொந்த வேலைக்கு உழைச்சு முன்னேறலாமேன்னுதான் இந்த நிறுவனத்தைத் தொடங்கியிருக்கோம். பெரிய கம்பெனிலாம் பொருளாதாரச் சீரழிவால படுத்தாச்சு. இனி விவசாயம்தான் எதிர்காலம். இதைப் புரிஞ்சுகிட்டா பிழைச்சுக்கலாம்" என்று சொல்லும் வெங்கட், பல வருஷமாக அமெரிக்காவில் ஐடி கம்பெனியில் வேலை பார்த்தவர்.●

- ஜனனி, படங்கள் : சித்ராமணி






...ற்று வரை இவர்கள்
...சம்பளத்திற்கு வேலை
...மாத சம்பள வேலை
...ான சொந்த பிஸினஸ்
...லையாக இருந்தாலும்
...பது இவர்களுடைய

